வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

தரம் :07	சைவசமயம் சுட்டெண்	நேரம் : 2.00 மணி

பகுதி - I

❖ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கும் இறைவன் பெயர்.
1) சுப்பிரமணியன் 2) தாயுமான சுவாமி 3) கந்தசுவாமி

02. சோழவள நாட்டை ஆட்சி செய்த மன்னன்.
1) இராஜஇராஜசோழன் 2) இராஜேந்திரசோழன் 3) அநபாயச்சோழன்

03. புதுமனை அமைக்கும் விதி முறைகளைக் கூறும் நூல்.
1) மணையடி சாஸ்திரம் 2) அர்த்த சாஸ்திரம் 3) தர்ம சாஸ்திரம்

04. சைவவித்தியா விருத்திச் சங்கம் தோற்றம் பெற்ற ஆண்டு.
1) 1924 2) 1925 3) 1923

(4x2 ½ = 10 புள்ளிகள்)

02. பொருத்தமான விடையை வைத்து இடைவெளிநிரப்புக.

01. தைப்பொங்கலை ..... எனவும் அழைப்பர்.

02. தேவார முதலிகளால் ..... பாடப்பட்டது.

03. காரைக்காலம்மையாரின் கணவர் பெயர் ..... ஆகும்.

04. 8 ஆம் திருமுறையாக ..... அமைகின்றது.

05. தேர் ஓடாது தடைப்பட்டபோது ..... பாடப்பட்டது.

(அடங்கன் திருமுறை / திருப்பல்லாண்டு / மகரசங்கிராந்தி / பரமதத்தன் / திருக்கோவை)

(5x2 = 10 புள்ளிகள்)

03. தொடர்புபடுத்துக.

	அ	ஆ
01.	தூலலிங்கம்	சீர்காழி
02.	யாழ்முரி	ஈசானமூலை
03.	திருத்தோணிபுரம்	திருஞானசம்பந்தர்
04.	பெரியபுராணம்	இராஜகோபுரம்
05.	அத்திபாரமிடல்	சேக்கிழார்

(5x2 = 10 புள்ளிகள்)

04. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

01. நட்சத்திரங்களில் பூசம் எட்டாவதாகும். ( )

02. தேவார முதலிகளுள் மாணிக்க வாசரும் ஒருவராவார். ( )

03. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் வாக்கு. ( )

04. ஆண், பெண் இருபாலாரும் செய்யும் நமஸ்காரம் திரியாங்கம் ஆகும். ( )

05. சிவனடியார்களை போற்றும் முகமாக திருத்தொண்டர் தொகை பாடப்பட்டது. ( )

(5x2 = 10 புள்ளிகள்)

பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

01) அ) திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை .....

மின்னார் ..... மேல் மிளிர் ..... அணிந்தவனே

மன்னே ..... மழ பாடியுள் .....

..... உன்னையல்லால் ..... நினைக்கேனே.


திருச்சிற்றம்பலம்

ஆ. பின்வரும் தேவாரப் பாடல்களில் இரண்டினைத் தெரிவு செய்து வரிக்கிரமமாக எழுதுக. பாடியவர், தலம், பண் என்பவற்றைக் குறிப்பிடுக.

1. நிரைகளலரவம்.....
2. அன்ன நடையார்.
3. குழலொழி யாழொலி .....

(10 புள்ளிகள்)

02) பின்வரும் படங்களைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1) 

1) .....
2) .....
3) .....

2) 

1) .....
2) .....
3) .....

3) 

1) .....
2) .....
3) .....

(10 புள்ளிகள்)

03) 1. மாணவரிடையே ஒழுக்கம் வளர்க்கப்படும் இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. பாடசாலையில் சைவசமயத்தினை வளர்க்கும் முகமாக செய்யப்படும் நான்கினைக் குறிப்பிடுக.
3. தேவாரம் பாடும் முன்பும், பின்பும் திருச்சிற்றம்பலம் கூறப்படுவதற்கான காரணம் யாது?

(3+3+4 = 10 புள்ளிகள்)

04) 1. விரதம் தொடர்பாக ஆறுமுக நாவலரது கருத்து யாது?
2. தைப்பூச விரதத்தின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.
3. பண்டிகைகளையும், விரதங்களையும் அனுஷ்டிப்பதனால் மாணவர்களிடம் வளர்க்கப்படும் பண்புகள் 04 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

05) 1. சமயகுரவர் நால்வரையும் குறிப்பிடுக.
2. சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த இடம், தாய் தந்தை பெயர், இயற்பெயர் என்பவற்றைக் குறிப்பிடுக.
3. மாணிக்கவாசகர் நிகழ்த்திய அற்புதங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

06) 1. புதுமனைப்புகுதல் என்றால் என்ன?
2. அத்திபாரம் இடுகின்றபோது வைக்கப்படும் பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. கிரகப் பிரவேச நாளன்று கோயிலில் இருந்து எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் நான்கினைத் தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

07) 1. "ஆலயம்" என்பதன் பொருள் யாது?
2. ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்படும் பொருட்களினைக் குறிப்பிடுக.
3. நீர் ஆலயத்திற்குச் செல்லும் சைவாசார முறையினைக் கூறுக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

08) பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.
1. காரைக்கால் அம்மையார்
2. சேர். பொன் இராமநாதன்
3. வாழ்வியல் நற்பண்புகள்
4. பண்டிகைகள்

(2x5= 10 புள்ளிகள்)